# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. வீரத்தின் உயர் நிலை

அ) மானம் ஆ) பணம் இ) சினம் ஈ) செல்வம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. **'எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள்'** என்ற கவிதையை எழுதியவர்

அ) தாமரைக்கண்ணன் ஆ) இரவி
இ) அமுதன் ஈ) அம்பி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. மிலேச்சர் என அழைக்கப்பட்டவர்

அ) தமிழர் ஆ) ஆரியர் இ) சூத்திரர் ஈ) பறங்கியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பொன் + காப்பு என்பதைச் சேர்த்தால்

அ) பொன்காப்பு ஆ) பொன்க்காப்பு இ) பொற்காப்பு ஈ) பொற்க்காப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இன்று கேரளம் என அழைக்கப்படும் நாடு

அ) வடநாடு ஆ) பாண்டியநாடு இ) சோழநாடு ஈ) சேரநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. புவி நடுக்கத்தினால் கட்டிடங்கள் ______________ என நடுங்கின.

அ) தடதட ஆ) படபட இ) மடமட ஈ) கிடுகிடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சிறுபொழுதுகளில் ஒன்று

அ) கூதிர் ஆ) வைகறை இ) கார் ஈ) இளவேனில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. கிழக்கில் இருந்து வீசும் காற்றின் பெயர்

அ) கொண்டல் ஆ) கோடை இ) வாடை ஈ) தென்றல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நாம் அயலவரின் ________________ கலந்து கொள்ள வேண்டும்.

அ) கல்விகேள்விகளில் ஆ) உயர்வுதாழ்வில்
இ) இன்பதுன்பங்களில் ஈ) ஊண்உறக்கத்தில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தரும் வினா எழுத்து

அ) ஏ ஆ) ஓ இ) ஆ ஈ) யா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. சேரன் தேர்வுக்காக ________________ ப் படித்தான்.

அ) ஓடிஓடி ஆ) விடியவிடிய இ) பாடிப்பாடி ஈ) ஆடிஆடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. **'நதியில் விளையாடிக் கொடியில் தலைவீசி நடந்த இளந்தென்றலே'** எனத் தென்றல் வரவு பற்றிப் பாடிய புலவர்

அ) நல்லத்துவனார் ஆ) பாவேந்தர் இ) இளங்கோ ஈ) கண்ணதாசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. **இடும்பை** என்ற சொல்லின் பொருள்

அ) குற்றம் ஆ) இன்பம் இ) துன்பம் ஈ) உயர்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. நீர் நிலைகளில் பூக்கும் பூ

அ) மல்லிகை ஆ) செவ்வந்தி இ) முல்லை ஈ) ஆம்பல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மலைவீழருவி என்பது

அ) 7 ஆம் வேற்றுமைத்தொகை ஆ) 5 ஆம் வேற்றுமைத்தொகை
இ) 4 ஆம் வேற்றுமைத்தொகை ஈ) 2 ஆம் வேற்றுமைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. உழவர் நெல் அறுவடை செய்தனர். இதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) சினையாகுபெயர் ஆ) தொழிலாகுபெயர்
இ) பொருளாகுபெயர் ஈ) காலவாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. சுரும்பு என்ற சொல் குறிப்பது

அ) மொட்டு ஆ) வண்டு இ) தும்பி ஈ) மலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நன்னூல் என்ற இலக்கணநூலை எழுதியவர்

அ) தொல்காப்பியர் ஆ) இளங்கோ
இ) பவணந்தி ஈ) ஆறுமுகநாவலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பின்வருவனவற்றில் கெடுதற் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மாவிலை ஆ) கடற்கரை இ) தைப்பொங்கல் ஈ) நீலவானம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. இலங்கையை இறுதியாக ஆண்ட ஐரோப்பியர்

அ) ஒல்லாந்தர் ஆ) போர்த்துக்கேயர் இ) ஆங்கிலேயர் ஈ) ஆரியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பாடல்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரும் சொல்லணி

அ) எதுகை ஆ) சிலேடை இ) மோனை ஈ) உருவகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. தமிழகத்தை மூவேந்தர்களும் ஆட்சிசெய்த காலம்

அ) இடைக்கழககாலம் ஆ) கடைக்கழககாலம்
இ) நடுக்கழககாலம் ஈ) முதற்கழககாலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. கருங்குழலி என்பது

அ) உவமைத்தொகை ஆ) அன்மொழித்தொகை
இ) வேற்றுமைத்தொகை ஈ) வினைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. **பனைக்கை** என்பது

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) உயர்வு நவிற்சி அணி
இ) உருவக அணி ஈ) உவமை அணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. சொல்லின் நேர்ப்பொருளை உணர்த்தாமல் வேறொருபொருளை உணர்த்துவது

அ) இரட்டைக்கிளவி ஆ) மரபுத்தொடர்

இ) அடுக்குத்தொடர் ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. ஆரியத்தின் செயல்களை எதிர்த்துத் தகர்த்தவர்களில் ஒருவர்

அ) விபுலாநந்தஅடிகள் ஆ) மறைமலைஅடிகள்

இ) தாவீதுஅடிகள் ஈ) தனிநாயகம்அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பின்வருவனவற்றுள் நாலறிவினையுடையது

அ) நண்டு ஆ) நத்தை இ) எறும்பு ஈ) பறவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இளவேனிற் காலத்துக்குரிய மாதங்கள்

அ) ஆனி, ஆடி ஆ) சித்திரை, வைகாசி

இ) மார்கழி, தை ஈ) மாசி, பங்குனி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. திருக்குறளில் ஒழுக்கமுடைமை எவ்வதிகாரத்தின்பின் வைக்கப்பட்டுள்ளது

அ) பண்புடைமை ஆ) அடக்கமுடைமை

இ) அறிவுடைமை ஈ) அன்புடைமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. யாழ்க்குடாநாட்டு மக்கள் அனைத்தையும் இழந்து ஒரே இரவில் ஏதிலிகளாக வெளியேறிய ஆண்டு

அ) 2005 ஆ) 1985 இ) 1975 ஈ) 1995

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

**புள்ளிகள் 30**

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. தென்றல்வரவு பற்றிப் பாடிய புலவோர் இருவரின் பெயர்களைத் தருக?

2. எழுவரை வென்றோன் ஒரு சிறுவன் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் இரண்டு தருக.

3. **சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்** என்ற குறளில் கூறப்படும் தொழில் எது ?

4. விசயன் வருகைக்கு முன் இலங்கையில் நிலவிய தமிழரசுகள் எவை? அவை எவ்வெப் பகுதியில் இருந்தன?

5. கழககாலத்தில் அரச மட்டத்தில் ஆரியம் விரவியமைக்கு எடுத்துக்காட்டுகள் இரண்டு தருக.

6. பழந்தமிழர் முதற்பொருள், உரிப்பொருள் என எவற்றைக் குறிப்பிடுகின்றனர்?

7. குறள்:- **நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**

**என்றும் இடும்பை தரும்**

இக்குறளின் பொருளைத் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலகில் எத்தனையோ தொழில்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தொழிலும் ஏதோ ஒரு விதத்தில் மக்களுக்கு உதவுகின்றன. ஆனால் இந்த உலகத்தில் உள்ள அத்தனை தொழில்களும் இயங்குவதற்கு மூல கரணியம் உழவுத்தொழிலே. உழவன் தான் இந்த உலகின் அச்சாணி. அச்சாணி இல்லாத்தேர் முச்சாணும் ஓடாது என்பது பழமொழி. உழவர் என்ற அச்சாணி இல்லா விட்டால் இந்த உலகம் என்ற தேர் அசையாது. பசிவந்தால் பத்தும் பறந்துவிடும் என்பதற்கு இணங்க உணவு இல்லையேல் எம்மால் எதுவும் செய்ய முடியாது. அத்தகைய உணவை எமக்கு உற்பத்தி செய்து தரும் உழவரும் உழவுத் தொழிலும் இல்லை என்றால் நாம் உயிர்வாழ முடியாது.

உழவரின் ஏர்முனைக்கு நிகராக எதையும் கூறமுடியாது. மேழி பிடிக்குங்கை, வேல்வேந்தர் நோக்குங்கை உழவரது கை. ஆம் உலகை ஆளும் வேந்தர் கூட உழவனின் கையைத்தான் எதிர்பார்க்க வேண்டும். எந்தத்தொழிலும் ஏதோ ஓர் இடர்ப்பாட்டுக்கு உள்ளாகும். ஆனால் உழவுத் தொழிலுக்கு எந்த ஓர் இடர்ப்பாடும் ஏற்படாது. அதனாற்றான் ஔவையார் பழுதுண்டு வேறோர் பணிக்கு என்று கூறுகின்றார். தமிழராகிய நாம் உழவரைப் போற்றுவதற்காக உழவர் திருநாளைக் கொண்டாடுகின்றோம்.

1. உழவுத் தொழிலுக்கு எந்த ஓர் இடர்ப்பாடும் ஏற்படாது.

என்பதை விளக்குவதற்கு ஔவையார் கூறிய கூற்று யாது ?

2. எதற்கு நிகராக எதையும் கூறமுடியாது என இங்கு கூறப்படுகிறது?

3. இங்கு வந்துள்ள பழமொழிகளில் ஒன்றைத் தருக?

4. தொழில்கள் இயங்குவதற்கு மூல கரணியம் எது எனக் கூறப்படுகின்றது?

5. இவ்வுலகிற்கு அச்சாணியாக விளங்குபவர் யார்?

புள்ளிகள் 10

**4) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து பத்து வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- வழிபார்த்துக் காத்திருக்கின்றோம் - உம்
  வரவை எதிர்பார்த்திருக்கின்றோம்

- இயற்கைத் தாய் கொடுத்த கொடைகளை
  என்றும் காப்போம் இன்பமாய் வாழ்வோம்

- பன்னிரண்டு ஆண்டு வரை தமிழ்கற்றேன்
  என் இனிய மக்களுக்காய்ப் பணிபுரிவேன்

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ) வழுக்கள் எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ) காலவழு, திணைவழு என்பனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

காலவழு :- ______________________________

திணைவழு :- ______________________________

2. தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

குரை :- ______________________________

குறை :- ______________________________

3. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

உருவக அணி :- ______________________________

தற்குறிப்பேற்ற அணி :- ______________________________

4. அ) இலக்கணவகையால் பால் எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ) பலர்பால், பலவின்பால் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

பலர்பால் :- ______________________________

பலவின்பால் :- ______________________________

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

தனிச்சொல்லியம் :- ______________________________

கலப்புச்சொல்லியம் :- ______________________________

______________________________

கூட்டுச்சொல்லியம் :- ______________________________

______________________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து; மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

தொடக்க காலத்தில் வாழ்ந்த மக்கள் ஒரு குமுகாய அடிப்படையில் நிலங்களின் அமைவுகளுக்கேற்பக் குழுக்களாக வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அத்தலைவனின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு வாழந்தனர். அப்பொழுது பணம் என்ற ஒன்று தோற்றுவிக்கப் படவில்லை. ஒவ்வொரு குமுகாயமும் தத்தம் நிலங்களில் விளைந்த பொருட்களைக் கொடுத்து ஒருவருக்கொருவர் உதவி செய்தே வாழ்ந்தனர். இதனைப் பண்டமாற்று என அழைத்தனர். ஆகவே தொடக்ககால மக்கள் தங்கள் பொருளாதாரத்தைப் பண்டமாற்றுப் பொருளாதாரமாகவே அமைத்து ஒவ்வொருவரும் பிரிக்க முடியாத ஒரு தொடர்பினைத் தங்களுக்குள் ஏற்படுத்தித் தங்களது தேவைகளை நிறைவேற்றினர். அமைதியான வாழ்க்கை முறையினை வாழ்ந்தனர். காலஞ் செல்லச்செல்ல இப்பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் சில குறைகள் ஏற்படத் தொடங்கின. அதாவது பொருட்களின் பிரிபடாத்தன்மை, பொருட்களின் நீண்ட காலப் பாவனைக் குறைவு, தேவைகளின் பொருந்துகை இன்மை இவை போன்ற பல கரணிகளால் பண்டமாற்றுப் பொருளாதாரம் நாளடைவில் மாறிப் பணப் பொருளாதாரம் தோன்றியது. தேவைகளை நிறைவேற்றும் ஊடகமாகப் பணம் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் இன்று இப்பணம் மக்களிடையே பல்வேறு தீமைகளை உருவாக்கியுள்ளது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். இன்று அனைத்தையும் நிர்ணயிக்கும் ஒரு கருவியாகப் பணம் திகழ்வதுடன் ஏற்றத் தாழ்வான ஒரு குமுகாயத்தையும் இப்பணம் உருவாக்கியுள்ளது. பணத்தாசை கொண்டவர்கள் அதற்காக எத் தீயசெயல்களையும் செய்யத் துணிந்து வருகின்றனர். “ஈட்டி எட்டினமட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்” என்று எம்முன்னோர் கூறிய முதுமொழி இன்றய நிலைக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

**புள்ளிகள் 05**

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

☆ ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் ஒழுக்கம் பற்றி கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

☆ பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

☆ புலம்பெயர் நாட்டில் தமிழ்க்கல்வி
(தமிழ்க்கல்வியின் நோக்கம், தமிழ்க்கல்வி கற்கும்போது நீர் சந்தித்த இடர்ப்பாடுகள், தமிழ்கற்பித்தல் முறையில் நீர் விரும்பும்மாற்றம்)

புள்ளிகள் 20